## சுருக்கம்

பேரூராட்சிகள் நிர்வாகம் – தூய்மை இந்தியா இயக்கம் 2.0 – திடக்கழிவு மேலாண்மை திட்டம் – 2021–22 – கல்லிடைக்குறிச்சி சிறப்புநிலை பேரூராட்சி திரவ கழிவு மேலாண்மை (Liquid Waste Management) திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட பணிகளில் ரூ.3.00 கோடிக்கு மேல் உள்ள பணிக்கு உரிய நிருவாக அனுமதி அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை**

**அரசாணை (ப) எண். 146** **நாள்: 10 .05.2022**

**சுபகிருது வருடம் சித்திரை – 27**

**திருவள்ளுவர் ஆண்டு – 2053**

**படிக்க:**

1. அரசாணை (ப) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை நாள்.12.04.2008.
2. பேரூராட்சிகளின் ஆணையரின் கடித எண்.6814/ 2021/உ4 நாள் 21.03.2022.

*******

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள் தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் 23 பேரூராட்சிகளில் தேங்கியுள்ள பழைய கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல் (Bio Mining) பணிகள் ரூ. 1,681.78 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல் தொடர்பாக 8 பேரூராட்சிகளில் திரவ கழிவு மேலாண்மை செய்தல் (Liquid Waste Management) ஆகிய பணிகள் ரூ.616.20 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.2297.98 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டம் 2.0–வின் 2–வது மாநில உயர்மட்ட குழுவின் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்காணும், உயர்மட்டக் குழுவின் ஒப்புதல் வழங்கப்பட்ட 23 பேரூராட்சிகளில், ரூ.,1681.78 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் தேங்கியுள்ள பழைய கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல் (Bio Mining) பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் திரவக் கழிவு மேலாண்மை செய்தல் (Liquid Waste Management) தொடர்பாக ஒப்புதல் வழங்கப்பட்ட 8 பேரூராட்சிகளில் (கல்லிடைக்குறிச்சி சிறப்புநிலை பேரூராட்சி ரூ.3.20 கோடி மதிப்பீட்டிலான திரவக் கழிவு மேலாண்மை செய்தல் (Liquid Waste Management) பணி நீங்கலாக) 7 பேரூராட்சிகளுக்கு (வீரவநல்லூர்,

முக்கூடல், சேரன்மகாதேவி, பத்தமடை, மேலச்செவல், கோபாலசமுத்திரம் மற்றும் நாரணம்மாள்புரம்) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகளின் ஆணையருக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பு ரூ.3.00 கோடி வரை உள்ளதால், மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 கோடிக்கும் அதிகமாக உள்ள கல்லிடைக்குறிச்சி சிறப்புநிலை பேரூராட்சியில் கீழ்கண்டவாறு ரூ.3.20 கோடி மதிப்பீட்டிலான திரவக் கழிவு மேலாண்மை செய்தல் (Liquid Waste Management) பணிகளை தூய்மை இந்தியா திட்டம் 2.0 –ன் கீழ் செயல்படுத்திட நிருவாக அனுமதி வழங்குமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(Rs. in Lakhs)

| Name of Town Panchayat | Total No. of Points | Decentralizes Package type STP | | | Dewatts | | | Total No of works | Total no of amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | No. of Points | no of Works | Amount | No. of Points | no of Works | Amount | | |
| Kallidaikurichi | 20 | 14 | 8 | 299.00 | 6 | 6 | 21.00 | 14 | 320.00 |

3. பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள கல்லிடைக்குறிச்சி சிறப்பு நிலை பேரூராட்சியில் 3.20 கோடி மதிப்பீட்டிலான திரவக் கழிவு மேலாண்மை செய்தல் (Liquid Waste Management) பணிகளை தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் செயல்படுத்திட நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்:17708/நிதி(நநி(ம)கு.வ/ 2022, நாள்: 07.05.2022–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

சிவ் தாஸ் மீனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை – 28.
சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்.
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
(நிதி ஆணையம்) துறை,
சென்னை –9.

<u>நகல்</u>

நிதி (ந.நி (ம) கு.வ./நிகு−4 /வரவு செலவு) துறை, சென்னை −9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை −9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

10/5/22